**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI
**Session Case No. 55 of 2022**
Prosecution witness LW16 (PW9) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 24.09.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராமர் | Father Name | : | பழனி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் ஊத்தங்கரை இயக்கமும் பராமரிப்பும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானம் கழகத்தில் பிரிவு -1 யில் பணியாற்றி வருகிறேன். கல்லாவி பிரிவு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பாக பணியாற்றினேன். 24.05.2022 ம் தேதி கல்லாவி காவல் நிலையத்திலிருந்து தபால் மூலம் கல்லாவி ஆனந்தூர் ரெட்டிபட்டி கிராமத்திற்கு 05.04.2022 ம் தேதி இரவு 11.30 அளவில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டதா என்பது குறித்து ஆய்வாளர் சான்று கேட்டார். அந்த கடிதத்தின் பேரில் 27.05.2022 தேதி மேற்படி ஏரெட்டி கிராமத்தில் 05.04.2022 ம் தேதி 11.30 அளவில் தடையில்லா மின்விநியோகம் செய்யப்பட்டது மின்தடை ஏதும் ஏற்படவில்லை என்று ஒரு சான்று வழங்கினேன். அந்த கடிதம் **EX.P.6** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

என்னுடைய சான்றில் எந்த டிரான்ஸ்பாம் மூலம் ஏரெட்டிபட்டிக்கு மின் விநியோகம் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த வேண்டுகோள் கடிதத்தில் மின் விளக்குகள் எரிய கூடிய நிலையில் இருந்ததா என்ற விவரம் கேட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எந்த தேதியில் போய் நான் அந்த மின் விளக்குகள் எரிய கூடிய நிலையில் உள்ளது என்பதை பார்வையிட்டது சம்மந்தமாக நான் என்னுடைய சான்றில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் மின்தடை ஏற்பட்டுள்ளது குறித்தோ, அந்த டிரான்ஸ்பாமர் பியூஸ் போனது சம்மந்தமாக ஆவணங்கள் பார்வையிட்டதாக என்னுடைய சான்றில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 05.04.2022 தேதி லதா வீட்டு முன்பு இருந்த மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தா மின்விநிநோயம் இருந்ததா அல்லது தடைப்பட்டு இருந்ததா என்பதை குறித்து சம்மந்தப்பட்ட ஒயர் மேன், போர் மேனை நான் விசாரித்து அவருடைய அறிக்கை வாங்கியதாக என்னுடைய சான்றிதலில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்மந்தப்பட்ட ஒயர் மேன், போர் மேனை விசாரித்தால் தான் அந்த இடத்தில் அன்றை தேதியில் மின் விநியோகம் ,இருந்தது நேரடியாக தெரியும் என்றும் அவர்களை விசாரிக்காமல் நான் போலீசார்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் அது தவறு. 05.04.2022 ல் இருந்து நான் சான்றிதழ் கொடுத்த 06.06.2022 குள்ளே மின்விளக்கு மாறற்ம் ஏதேனும் செய்துயிருக்கலாம் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் பொதுவாக ஏரெட்டிப்பட்டி சம்மந்தமாக பொதுவாக மின்தடை ஏதும் இல்லை ஏ்ன்று சான்றிதழ் கொடுத்துள்ளேன் என்றும் குறிப்பிட்டு ஏரெட்டிபட்டியில் உள்ள டிரான்பாமரில் 05.04.2022 ம் தேதி இரவு 11.30 மின்விநியோகம் இருந்ததா என்பதை குறித்து நான் குறிப்பிட்டு சான்றிதழ் கொடுககவில்லை என்று சொன்னால் சரிதான். ஏரெட்டிபட்டிக்கு எத்தனை டிரான்பாமர் உள்ளது, எத்தனை மின் விளக்ககுகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது.

**Sd/- Thiru.V.Damodaran,**

**Additional District Judge,**
**Krishnagiri.**